| | | | | |
|---|---|---|---|---|
| **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | |
| மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | **20/01/2024** முதல் | **24/01/2024** |
| அறிக்கை எண் : | **006/ 2024** | வெளியீட்டு நாள் : | **19/01/2024** | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31°- 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19° - 21° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (14.01.2024 **முதல்** 18.01.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 24-01-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/01 | 15/01 | 16/01 | 17/01 | 18/01 | **தேதி** | **நாள்-1** 20/01 | **நாள்-2** 21/01 | **நாள்-3** 22/01 | **நாள்-4** 23/01 | **நாள்-5** 24/01 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 5 | 1 | 0 | 0 | 0 |
| 32 | 32 | 31 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 33 | 32 | 32 | 33 |
| 22 | 21 | 21 | 19 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 22 | 22 | 23 |
| 4 | 3 | 3 | 2 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 3 | 4 | 4 | 4 |
| 88 | 82 | 85 | 85 | 87 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 53 | 50 | 50 | 41 | 55 | | 60 | 50 | 50 | 50 | 40 |
| 6 | 7 | 7 | 6 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 6 | 8 |
| வட கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | **கிழக்கு** | **வட கிழக்கு** | **கிழக்கு** | **கிழக்கு** | **கிழக்கு** |

**குறுஞ்செய்தி :**

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜனவரி 20 மற்றும் 21ம் தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 32°-33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், கிழக்கு மற்றும் வடகிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

**பொது ஆலோசனை:**

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (19ஜன - 01 பிப்ரவரி 2024):**

**மழைப்பொழிவு :**

19-01-2024 - 01-02-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளது

**அதிகபட்ச வெப்பநிலை :**

12-01-2024 - 25-01-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

19-01-2024 - 25-01-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

26-01-2024 - 01-02-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

அடுத்த சில நாட்களுக்கு வறண்ட வானிலேயே நிலவுவதால் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். மண்ணின் ஈரப்பதத்தை பொருத்து, காய்கறி பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மொச்சை, பருத்தி, கால்நடை.**

**மொச்சை:**

மொச்சை பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பூக்கள் அதிகம் எடுக்கவும், பூக்கள் உதிராமல் இருக்கவும், பூத்த பூக்கள் தரமான காய்களாக உருவாகவும், காய்கள் சீரான அளவுகளில் திரட்சியாக காணப்படுவதற்கும்.

**பருத்தி :**

பருத்திப் பயிரைத் தாக்கும் இளஞ்சிகப்பு காய்ப்புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் இளம் புழுக்கள் சப்பைகள், மொக்குகள், பூக்கள் மற்றும் இளம் காய்களையும் தாக்கி அழிக்கும். தாக்கப்பட்ட மொட்டுகள் உதிர்ந்து விடும், மலர்கள் நெருக்கமாய் குவிந்து காணப்படும், வளர்ச்சியடைந்த புழு காயினைத் துளைத்து உள்ளே சென்று உண்டு சேதம் விளை விக்கும், விதைகளையும் தாக்கும். இதனால் தாக்கப்பட்ட பஞ்சுகள் கறை படிந்து காணப்படும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 100 மில்லி என்ற அளவில் குளோரன்டிரானிலிப்ரோல் அல்லது 300 மில்லி என்ற அளவில் பிப்ரோனில் இவற்றில் ஏதேனும் ஒரு மருந்தினை கலந்து தெளிக்கவும்.

**கால்நடை:**

இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் தற்போது நிலவிவரும் அதிக பனி காரணமாக தங்களது கால்நடைகளை குந்து நோய் தாக்க வாய்ப்பு உள்ளது.

இதனை தவிர்க்க பனிகாலங்களில் தங்களது கால்நடைகளை வெட்டவெளியில் பனியில் கட்டாமல் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கவும். மாட்டுக் கொட்டகைகளின் பக்கவாட்டில் சணல் சாக்குகளை கட்டி வைக்கவும்.